# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.356/2023
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.2
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | பழனிசாமி | -- | |
| Father's Name | சுப்பையா | Calling | டெய்லர் |
| Village | மல்லி | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் மல்லி 3 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் டெய்லரிங் வேலை செய்து வருகிறேன். அசா1 திவ்யா எனது மருமகள் ஆவார். இவ்வழக்கில் இறந்துபோன செல்வகுமார் எனது மகன் ஆவார். எனது மகனும் திவ்யாவும் காதல் திருமணம் செய்துக்கொண்டனர். அவர்கள் இருவரும் எங்களது வீட்டிலேயே குடியிருந்து வந்தார்கள். எனது மகன் சிவகாசியிலுள்ள பிரிண்டிங் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். அவர் வழக்கமாக அவருடைய இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்று வருவார். 22.02.2023 ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது எனது மருமகள் என்னிடம் தனது கணவருக்கு சாமிநத்தம் அருகில் வைத்து சிவப்பு கலர் கார் மோதிவிட்டதாகவும் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அவரை கொண்டு செல்வதன் அடிப்படையில் என்னிடம் தெரிவித்தார். நானும் எனது மருமகள் திவ்யாவும் ஒரு ஆட்டோவில் உடனடியாக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கு எனது மகனுக்கு தலை, கை, காலில் அடிப்பட்டு இறந்து போயிருந்த நிலையில் இருந்தார். காரை ஓட்டி வந்த நபர் மாரநேரியை சேர்ந்தவர் என்று தெரிந்துக்கொண்டேன். இது சம்பந்தமாக எனது மருமகள் புகார் மனு கொடுத்தார். நான் அதில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of August 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**